பெரியார் பல்கலைக்கழகம்
**PERIYAR UNIVERSITY**
State University – NAAC 'A++' Grade – NIRF Rank 94
State Public University Rank 40 – SDG Institutions Rank Band: 11-50
Salem– 636011, Tamil Nadu
கணினி மையம்

PU/CC/Quotation-Notification No/14/2025 தேதி: 13.01.2026

## விலைப்புள்ளி அறிவிப்பு: 14

பெரியார் பல்கலைக்கழகம், கணினி மையம், பார்வையாளர் இருக்கைகள் (Visitors Chair) 13 எண்ணிக்கைகளில் கொள்முதல் செய்வதற்கு கீழ் கண்டுள்ளபடி மூடி முத்திரையிடப்பட்ட விலைப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

| S.No | Name of the Item with Particulars | Quantity |
|---|---|---|
| 1 | Visitors Chair<br>Made of 16 gauge 1" round CR steel pipe. Pipe are Black powder coated, Seat and back rest are made of maroon colour fabric and foam. Handles are Made of PU material | 13 Nos |

நிபந்தனைகள்:

1. 30.01.2026 தேதி அன்று மாலை 3.00 மணிக்குள் விலைப்புள்ளிகள் இவ்வலுவலகத்திற்கு வந்து சேர வேண்டும். அன்று மாலை 4.00 மணிக்குள் விலைப்புள்ளிகள் திறக்கப்படும். காலதாமதமாகப் பெறப்படும் விலைப்புள்ளிகள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
2. தங்கள் நிறுவன முகவரியிடப்பட்ட கடிதத்தில் மேலே கேட்கப்பட்டுள்ள பொருளுக்கு விலையை அளித்தும், ஒன்றுக்கு மேற்பட்ட பொருட்கள் கேட்கப்பட்டிருப்பின் இதில் கொடுக்கப்பட்டுள்ள வரிசையின்படி விலை குறிப்பிடப்பட்டிருக்கவும் வேண்டும்.
3. விலைப்புள்ளியில் ஒவ்வொரு பொருளின் தொகையும் பைசா விகிதத்தில் இல்லாமல் முழுத்தொகையாக (Round Figure) இருக்க வேண்டும். மேலும், மொத்த தொகை கண்டிப்பாக எண்ணிலும், எழுத்திலும் எழுதப்பட்டிருக்க வேண்டும். பெரியார் பல்கலைக்கழக பதிவாளர் குறிப்பிடும் இடத்தில் பொருட்களைக் கொண்டு வந்து சேர்க்க வேண்டும். விலைப்புள்ளியில் குறிப்பிடப்படும் தொகையானது வண்டிச்சத்தம், புகை வண்டி சத்தம், கட்டுமானச் செலவு, காப்பீட்டு கட்டணம் மற்றும் வரி ஆகியவற்றை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.
4. விலைப்பட்டியலில் (Invoice/Bill) விற்பனை வரி தனியே காண்பிக்கப்பட வேண்டும். அவ்வாறு இல்லையெனில் பட்டியல் தொகையில் விற்பனை வரி பிடித்தம் செய்யப்பட்டு மீதித்தொகை வழங்கப்படும்.
5. மேலே கொடுக்கப்பட்டுள்ள பொருளுக்குத் தகுந்த உத்திரவாத காலத்தைக் குறிப்பிடவேண்டும்.
6. விலைப்புள்ளி பதிவாளர் பெயரிலும், விலைப்புள்ளி உறையின் முன் "கடித எண்: PU/CC/Quotation – Notification No/14/2025 மற்றும் Purchase of Visitors Chair மேற்கொள்ள விலைப்புள்ளி சமர்ப்பித்தல் தொடர்பாக – சமர்ப்பிக்கப்படவேண்டிய நாள்: 30.01.2026 என்று கண்டிப்பாக எழுதி இயக்குநர், கணினி மையம், பெரியார் பல்கலைக்கழகம், பெரியார் பல்கலைநகர், சேலம்-11 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.
7. விலைப்புள்ளியில் எந்தவொரு திருத்தமும் இருக்கக்கூடாது. அவ்வாறு திருத்தம் இருந்தால் அந்த இடத்தில் முறையான சான்றொப்பமிட வேண்டும்.
8. அனைத்து கடிதத் தொடர்புகளுக்கும் இந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எண் மற்றும் நாளைக் குறிப்பிட வேண்டும்.
9. குறிப்பிடப்படும் விலையின் மதிப்பு ஆறு மாத காலம் வரை செல்லத்தக்கதாக இருக்க வேண்டும்.
10. தேவைப்பட்டால் இறக்குமதி உரிமம் வழங்க வேண்டும்.
11. GST மற்றும் PAN சான்று எண்கள் கட்டாயம் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.
12. எந்தவொரு காரணத்திற்காகவும் எவ்வித முன்னறிவிப்புமின்றி விலைப்புள்ளியை இரத்து செய்வதற்குப் பல்கலைக்கழக நிர்வாகத்திற்கு முழு அதிகாரம் உண்டு.

13/01/2026
இயக்குநர்

இயக்குநர்
கணினி மையம்
பெரியார் பல்கலைக்கழகம்,
சேலம் - 636 011.